DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.85 /2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Procecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | இஸ்ரவேல் (Pw.2) |
| Father/Husband Name | : | மைக்கேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day April of 2023

( எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது கண்டுகொண்டான் மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அசா1 எனது மைத்துனர். எதிரிகள் அனைவரும் எனது ஊரைச் சார்ந்தவர்கள். கடந்த 04.10.2019 ம் தேதியன்று மதியம் 1.30 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்து கடைக்கு டீ சாப்பிடுவதற்காக வந்த கொண்டு இருந்தேன். அப்போது அசா1 ன் வீட்டு அருகே எதிரிகள் அனைவரும் அசா1 ஐ கீழே போட்டு கோவில்பிள்ளை, மரியசூசை, அந்தோணி மரியா, சேகர் ஆகியோர் கம்பை வைத்து அடித்து கீழே தள்ளவும் நான் அசா1 ஐ திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு அசா1 10 நாள் சிகிச்சையில் இருந்தார். அசா1 க்கு முதுகு மற்றும் இடது காலில் காயம் ஏற்பட்டது. போலிசார் மருத்துவமனைக்கு விசாரிக்க வந்தார்கள். அவர்களிடம் நடந்ததை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை அசா1 சொல்ல சொல்ல நான் எழுதினேன். மேற்படி சம்பவமானது புறோம்போக்கு இடப்பிரச்சனை சம்பந்தமாக நடந்தது என்று அசா1 என்னிடம் சொன்னார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி :–

2. எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.